பக்கங்கள் 16 + 5

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 09 புதன்கிழமை 25.09.2024 | அதிர்வு 55

## 8 மாகாணங்களுக்கான ஆளுநர்கள் பதவியேற்பு

(ந.லோகதயாளன்)



இலங்கையின் 8 மாகா ணங்களுக் கான ஆளுநர் கள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன் பாக இன்று 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# ஜனாதிபதித் தேர்தலின்போது நான் எவர் சார்பாகவும் செயற்படவில்லை

## மக்கள் பக்கமே நின்றேன் என்று கூறுகின்றார் சார்ள்ஸ்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

"ஜனாதிபதித் தேர்தலின்போது நான் யாருக்காகவும், யார் சார்பாகவும் எந்த விடயங்களையும் கூறவில்லை. மக்கள் யாரை விரும்பி வாக்களிக்கின்றார்களோ அது மக்களின் விருப்பம் என்பது எனது கருத்தாக இருந்தது."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். 02

# நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் ஆணை கிடைக்கும்

## இப்படி சஜித் நம்பிக்கை

"நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் நான்தான். இது கட்சி எடுத்த ஒருமித்த முடிவு. இதில் எவ்வித மாற்றமும் வராது. நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக ஆளும் அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்குவார்கள்."

– இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்கின்றேன். பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகி வருகின்றோம். ஐக்கிய மக்கள் கூட்டணியாகவே பயணம் தொடரும். முற்போக்கு சக்திகள் எம்முடன் கைகோர்க்கலாம்."

– என்றார்.





# ரணில் – சஜித் இணைந்தால் நாட்டுக்குப் பெரும் நன்மை!

## ராஜித எம்.பி. தெரிவிப்பு

"ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் இணைந்து செயற்பட்டால் நல்லது. அது நாட்டு மக்களுக்குப் பெரும் பாக்கியமாக இருக்கும்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

நான் அங்கம் வகிக்கும் கட்சி இது தொடர்பில் எத்தகைய முடிவை எடுத்தாலும் எனது முழுமையான ஆதரவு அநுரவுக்கு இருக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் இணைந்து செயற்பட்டால் நல்லது. அது நாட்டு மக்களுக்குப் பெரும் பாக்கியமாக இருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் மற்றும் ரணில் பெற்ற வாக்குகளை இணைத்தால் அநுர பெற்றதை விடவும் அதிகம். எனவே, இரு தரப்புகளும் இணைந்தால் பொதுத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம்.

ரணில் விக்கிரமசிங்க பொதுத் தேர்தலில் போட்டியிடமாட்டார், ஆனால்,



கட்சியை வழிநடத்துவார். அவர் ஜனாதிபதிப் பதவியை வகித்தவர். எனவே, அவர் இனி பிரதமர் பதவியைக்கூட ஏற்கமாட்டார்." – என்றார்.

---

### ஜனாதிபதித்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் உள்ள தனது அலுவலகத்தில் இன்று புதன்கிழமை காலை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் என்னைச் சந்தித்து கதைத்தபோது இனவாதமற்ற இலங்கையையும், இலஞ்ச ஊழல் அற்ற இலங்கையையும் உருவாக்குவதற்காகத் தான் பாடுபடுவதாக என்னிடம் உறுதி அளித்திருந்தார்.

அந்தவகையில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க தனது உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும்.

இனவாதம் அற்ற நாடாக இலங்கை மாறுவதற்கும், இலஞ்ச ஊழல் அற்ற நாடாக இலங்கையைக் கொண்டு வருவதற்கும் அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு – கிழக்கில் உள்ள தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர் நினைவில் வைத்து தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதை நான் அவரிடம் கோரிக்கையாக முன்வைக்கின்றேன்.

ஜனாதிபதித் தேர்தலின்போது நான் யாருக்காகவும், யார் சார்பாகவும் எந்த விடயங்களையும் கூறவில்லை. மக்கள் யாரை விரும்பி வாக்களிக்கின்றார்களோ அது மக்களின் விருப்பம் என்பது எனது கருத்தாக இருந்தது.

பல்வேறுபட்ட குழப்பங்களுக்கு மத்தியில் இந்த ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

கடந்த 2 வருடங்களாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைத்து மன்னார் மாவட்டத்தில் இருந்த சில பிரச்சினைகளுக்குத் தீர்வை முன் வைத்தேன். முல்லைத்தீவிலும் ஏற்பட சில பிரச்சனைகளுக்கு ரணில் விக்கிரமசிங்க ஊடாக தீர்வைப் பெற்றுக்கொடுத்தேன்.

மக்களின் பிரச்சினைகளை நான் அவரிடம் முன்வைத்தபோது சில விடயங்களைச் சுமுகமான முறையில் தீர்த்து வைத்தார். அண்மையில் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு விஜயம் செய்தபோது கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் வீட்டுக்கும் சென்றிருந்தார். அதேபோல் அண்மையில் மன்னாருக்கு வருகின்றபோது எனது வீட்டுக்கும் வரவுள்ளதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளடங்கலாகப் பல பிரச்சினைகளுக்கு சாதகமான பதிலை தந்ததன் அடிப்படையில் இங்குள்ள மக்களின் பிரச்சினைகளைக் கலந்தாலோசிக்கும் வகையில் அவரது வருகை அமைந்திருந்தது.

அதன் அடிப்படையில் அவர் இங்கு வந்து சென்றிருந்தார். இந்நிலையில், அண்மைக்காலமாக என் மீது சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்." – என்றார்.

---

### 8 மாகாணங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்றனர்.

இலங்கையின் 9 மாகாணங்களில் சப்ரகமுவ மாகாணம் தவிர்ந்த ஏனைய 8 மாகாணங்களுக்கான ஆளுநர்களே இன்று பிற்பகல் 2 மணியளவில் பதவிப் பிரமாணம் செய்தனர்.

இவ்வாறு பதவியேற்ற 8 ஆளுநர்களும் அந்தந்த மாகாணங்களில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண ஆளுநராக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண புதிய ஆளுநராக பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர!

**(அபு அலா, அஸ்ஹர் இப்றாஹிம்)**

ஊவா வெல்லச பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட பின்னர் முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் அண்மையில் பதவி விலகியிருந்தனர்.

இந்த நிலையில், கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் பதவி விலகியதை தொடர்ந்து இந்தப் பதவிக்கு ஜயந்தலால் ரத்னசேகர ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜயந்தலால் ரத்னசேகர கொழும்பு நாலந்தா கல்லூரியின் பழைய மாணவராவார்.

இவர் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 2017 பெப்ரவரி முதல் நவம்பர் 2023 வரை பணியாற்றியுள்ளார்.



ஜயந்தலால் ரத்னசேகர தனது ஆரம்ப கல்வியை கந்தளாய் அக்ரபோதி வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வி கொழும்பு நாலந்தா கல்லூரியிலும் தொடர்ந்துள்ளார்.

தொடர்ந்து இவர், ரஷ்யாவின் மக்கள் நட்பு பல்கலைக்கழகத்தில் 1988 இல் வேதியியலில் கலைமாணிப் பட்டம் பெற்றதைத் தொடர்ந்து, 1993 இல் அவர் வேதியியலில் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

மேலும், 1988 இல் வேதியியலில் கலைமாணி பட்டம் பெற்றதை தொடர்ந்து, 1993 இல் அவர் வேதியியலில் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றார்.

ரத்னசேகர 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்தார்.

இதனை தொடர்ந்து அவர், 2017 ஜனவரியில் இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.

2018 இல் வேதியியலில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார்.

2021 இல் துணைவேந்தர்கள் மற்றும் இயக்குநர்கள் குழுவின் தலைவராக பணியாற்றியுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள், சுற்றுச்சூழல் வேதியியல், கோட்பாட்டு வேதியியல், உயர் கல்வியில் தர உத்தரவாதம் மற்றும் அறிவியல் கல்வி ஆகியவற்றில் ஆராய்ச்சி தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## எதிரணிப் பிளவு நீடிக்கும்

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது.

இன்னும் ஒன்பது நாள்களில் வேட்பு மனு தொடங்குகின்றது. அதன் பின் ஒரு வாரத்தில் வேட்பு மனு ஏற்பு முடிவடையும்.

ஆக, புதிய கூட்டுக்கள், அணி சேரல்கள், கால்வாரல்கள் எல்லாவற்றுக்கும் 16 நாள்களே உள்ளன. இந்த குறுகிய காலத்துக்குள்தான் எல்லாம் நடைபெற்றாக வேண்டும்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்கு காரணமாக இருந்த அடிப்படை அம்சங்களில் ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி - ஐக்கிய மக்கள் சக்தி பிளவு. அதிலும் விட, ரணில் விக்கிரமசிங்க - சஜித் பிரேமதாஸ முரண்பாடு என்று கூறுவது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் சக்திக்கு கிடைத்த வெற்றி வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அதற்கு பெரும் ஊக்க சக்தியாக இருக்கும் என்பது தெளிவு.

நாடாளுமன்ற வலிமையையும் அந்தத் தரப்பிடம் சிக்காமல் பார்த்துக் கொள்வதற்காக எதிர்த்தரப்புகள் இந்தப் பொதுத் தேர்தலை ஒன்றித்து எதிர்கொள்ள வேண்டும் என்ற பொதுவான அபிப்பிராயம் நிலவுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான், சேர்ந்து செயலாற்றுவோம் வாருங்கள் என்ற அழைப்பு ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து ஐக்கிய மக்கள் சக்திக்கு வந்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க நீடிக்கும் நிலையில் தாங்கள் அக்கட்சியுடன் இணங்கிப் போகும் நிலைமையைப் பரிசீலிக்கக் கூட ஐக்கிய மக்கள் சக்தி தயார் இல்லை என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் -

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்குப் பாரிய இடையூறை ஏற்படுத்தியவர் ரணில் விக்கிரமசிங்க என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகின்றார்.

அதனால், இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கரமசிங்கவுடன் இணைந்து தங்கள் கட்சி அரசியலில் ஈடுபட எவ்வித வாய்ப்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாஸவுக்கு இடையூறு விளைவிக்கவில்லை எனின் சுமார் 13 லட்சம் மேலதிக வாக்குகள் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றி பெற வாய்ப்புகள் இருந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவது மொட்டுக் கட்சியுடன் இணைவதற்குச் சமம் என்பதால் நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் - சஜித் ஒன்றிணைவது குறித்துப் பேசுவதற்கு கூட ஐக்கிய மக்கள் சக்தி விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்தாலும் அதனை ஏற்கத் தாங்கள் தயாராக இல்லை என திஸ்ஸ அத்தநாயக்க உறுதியாகத் தெரிவித்தார்.

இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணி மூலம் மாத்திரமே தாங்கள் போட்டியிடுவர் எனவும் அவர் கூறினார்.

எதிரணிகள் பிரிந்து நிற்கும் வரையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தரப்புக்கு அது வலிமைதான்.



# மன்னார் மாந்தை மேற்கு பகுதியில் 3 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

12 லட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

மன்னார் தள்ளாடி இராணுவ புல னாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளின் உளவுப் பிரிவினருடன் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பு தேடுதல் நட வடிக்கையில் இந்தக் கைது இடம்பெற் றுள்ளது. இந்த சம்பவமானது நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள மூன்றாம் பிட்டி பகுதியில் இடம்பெற்றது.

இந்த நபரால் விற்பனைக்காக பொதி செய்யப்பட்ட 3 கிலோ 570 கிராம் கஞ்சாவுடன் அவர், அவரது இல்லத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மற்றும் சான்றுப் பொருள்கள் மேலதிக விசாரணைகளுக் காக இலுப்பைக்கடவை பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

# மாத்தளை சோமுவின் 'ஒற்றைத்தோடு' சிறுகதைத் தொகுதி சிட்னியில் வெளியீடு

**(ஐங்கரன் விக்கினேஸ்வரா)**

புலம்பெயர் மண்ணில் முன்னணி ஈழத்து எழுத்தாளரான மாத்தளை சோமுவின் 30 ஆவது நூலான "ஒற்றைத்தோடு" சிறுகதைத் தொகுதி வெளியீடும் அறிமுகமும் சிட்னியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் மாத்தளை சோமு சிறுகதை, புதினம், பயண இலக்கியம் முதலான துறைகளில் பல நூல்களை எழுதி மலையக இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.

அத்துடன் மலையக இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றிய மாத்தளை சோமுவின் பெயர் தமிழ் இலக்கிய உலகில் மிகவும் பரிச்சயமானது. இலக்கியத் துறையில் தனக்கென தனியான ஒரு இடத்தைப் பிடித்திருப்பவர்.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்த நிலையில் அமைதி யாக தனது எழுத்துப்பணியை சமூக நோக்கோடு செய்துவ ருபவர். அவரது இலக்கிய முயற்சிகளின் தொடராக முப்பதாவது நூல் வெளியாகிறது.

மாத்தளை சோமுவுக்கு எழுத்தே அவரின் மூச்சாக இருக் கிறது. இந்த நிகழ்வின் தொடக்க இணைப்புரையை குலசேக ரம் சஞ்சயனும், வரவேற்புரையைச் சமூக ஆர்வலர் வசந்த ராஜா வும் ஆற்றுவார்.


இந்நிகழ்வின் தலைமை உரையை கலாநிதி குலம் சண்முகமும், வாழ்த்துரைகளைப் பத்திரிகையாளர் எஸ். சுந்தரதாஸ் மற்றும் கலாநிதி மாலினி ஆனந்தகிருஷ்ணன் ஆகியோர் ஆற்றுவர்.


இலக்கியப் படைப்புகள் அனைத்திலும் தனக்கென தனி முத்திரை பதித்துள்ள மாத்தளை சோமு பற்றிய படைப்பாளி குறித்தப் பகிர்வை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

'ஒற்றைத்தோடு' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக உரை யைச் செல்வி வி.விஜயாழ், திருமதி இந்துமதி சிறினிவாசன், மயில்வாகனம் தனபாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்.

அத்துடன் முனைவர் இலக்குவன் சொக்கலிங்கம் (ஆங்கில மொழி பயிற்றல் துறை, அரசு, நியூசிலாந்து) உரையாற்றுவர்.

நூலாசிரியர் மாத்தளை சோமுவின் பதிலுரையை தொடர்ந்து, நிகழ்வின் நன்றியுரையை பூபாலசிங்கம் சின்னய்யா நிகழ்த்துவார்.




Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# நாடாளுமன்றத் தேர்தல் திகதி அரசமைப்புக்கு முரணானதா?

## மறுக்கின்றார் தேர்தல் ஆணையாளர்

நாடாளுமன்றத் தேர்தலை நடத்த அறிவிக்கப்பட்டுள்ள திகதி அரசமைப்புக்கு முரணானது என சமூக ஊடகங்களில் வெளியாகும் கருத்துக்களைத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க மறுத்துள்ளார்.

"நாடாளுமன்றத் தேர்தலை நடத்த எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி ஏற்ற திகதி அல்ல. ஏனெனில் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் 5 வார கால இடைவெளி இருக்க வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது." – என்று பலர் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க விளக்கமளித்துள்ளார்.

"நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் ஒக்டோபர் 4 –11 வரை ஆகும். வேட்புமனுத் தாக்கல் செய்ய ஆரம்பிக்கும் திகதி உட்பட 5 வார இடைவெளி இருக்க வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது. எனவே, தேர்தலுக்கு நவம்பர் 14 ஆம் திகதி சரியானது." – என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கல்முனை முன்னாள் பிரதி முதல்வர் வாழ்த்து

(எம்.என்.எம்.அப்ராஸ்)

ஜனாதிபதி தேர்தலில் ஏகோபித்த மக்கள் அபிமானங்களை வென்று பெரும்பான்மையான வாக்குகளை பெற்று இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் 09 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொருளாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

தமது வாழ்த்து செய்தியில்,

நாடு பொருளாதார நெருக்கடியான சூழ் நிலையில் சவாலான இந்தக் கால கட்டத்தில் மக்கள் ஆணை மூலம் ஜனாதிபதியாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். சகல இன மக்களின் எதிர்பார்ப்புடன் நாட்டை முன்னோக்கி சவால்களை வென்று இலக்கை அடைவீர்கள் என எதிர்பார்ப்பதோடு உங்களின் பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டும்.– என்று தெரிவித்துள்ளார்.



# "நமது உற்பத்திகளை நாமே வாங்குவோம்" சம்மாந்துறையில் சிறு கைத்தொழில் சந்தை

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக சிறு கைத்தொழில் உற்பத்தி பிரிவினரால் நமது உற்பத்திகளை நாமே வாங்கி எம்மவர்களை ஊக்கிவிப்போம் எனும் தொனிப்பெருளில் சிறு உற்பத்தி சந்தை இன்று (25) பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாகச் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டார். இதன்போது சிறு உற்பத்தி முயற்சியாளர்களுக்கு அடுத்த கட்ட தொழில் முயற்சிகளையும், சந்தை வாய்ப்புகளையும் ஏற்படுத்தும் வகையில் அறிவுரை வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வுக்கு உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம். அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், நிதி உதவியாளர் எம். முஸ்தபா, சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விற்பனையாளர்கள், நுகர்வோர் என பலரும் கலந்து கொண்டனர்.




# கௌரவ விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஓய்வுபெற்ற ஆசிரியரும் பன்னூலாசிரியரும் சிரேஷ்ட எழுத்தாளருமான கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட், இலக்கியத் துறையில் ஆற்றிவரும் அயராத பங்களிப்புகளுக்காக "கலா கீர்த்தி, கலாபுத்ர, தேசபந்து" எனும் கௌரவ விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

சர்வதேச மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனமும் இணைந்து, 'தேசிய கலை அரண்' அமைப்பின் ஏற்பாட்டில் "வாழும்போதே வாழ்த்துவோம்" என்ற தொனிப்பொருளில் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போதே, இவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகமாகச் செயற்பட்ட சமன் ரத்ன பிரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்திக விஜய் ரத்ன, மாநகர முதல்வர் கஜீவ மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் வெளிநாட்டு விவகார பணிப்பாளர் சுனில் பெரேரா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சுமார் 22 ஆண்டுகளுக்கு மேல் கலை மற்றும் சமூகப் பணிகள் ஆற்றிவரும் "கண்ணகி கலாலயம்" தமது ஐக்கிய சுயதொழில் வியாபாரிகள் சங்கம் கலையரண் இவர்களோடு தேசிய கலை அரண் ஒன்றிணைந்து ஏற்பாடுகளைச் செய்தது.

இவ்வமைப்புகளின் தலைவர் ஏ.கே. இளங்கோ மற்றும் உப தலைவர் ஏ. சுரேஷ் அவர்களோடு குழுவினர்களும் இணைந்து இதன் திட்டத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தலவாக்கலை கிறேட்வெஸ்டனில் முன்மாதிரியாக செயற்பட்ட சாரதி!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்ட தொழிற்சாலையில் உத்தியோகத்தராக வேலை செய்யும் ஒருவரும் அவரது மனைவியும் தலவாக்கலை நகை கடையொன்றில் இரண்டரை லட்சம் பெறுமதியாக இரண்டு தங்க காப்புகளை வாங்கிக்கொண்டு தலவாக்கலை கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்ட பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரின் ஓட்டோவில் தமது வீட்டுக்கு திரும்பியுள்ளர்.

இதன்போது வாங்கி வந்த தங்க காப்புகளை தவறவிட்டுள்ளனர். இந்த நிலையில் தமது வீட்டை வந்தடைந்த உத்தியோகத்தரும் அவரது மனைவியும் தாங்கள் வாங்கி வந்த தங்கக் காப்புகளை தவறவிட்ட நிலையில் அங்கும் இங்கும் அதனைத் தேடி அலைந்துள்ளனர்.

இந்த நிலையில் தனது ஓட்டோவில் கிடந்த குறித்த தங்கக் காப்புகளை ஓட்டோவில் பயணம் செய்த தேயிலை தொழிற்சாலை உத்தியோகத்தரின் வீட்டுக்கே தேடி வந்து ஓட்டோச் சாரதி வழங்கியுள்ளார்.

இவ்வாறு முன்மாதிரியாக செயற்பட்ட நபர் கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தைச் சேர்ந்த சாரதியான ஞானகிராமன் என்பவராவார். இவரின் நேர்மையான செயலை தலவாக்கலை பிரதேச மக்கள் பாராட்டுகின்றனர்.




குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# மாணவத் தலைவிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொலவான ஏவ் மரியா கொன் வென்ட்டின் ஒழுக்காற்று சபையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பாடசாலை மாணவத் தலைவிகளுக்கான தலைமைத்துவ பயிற்சி அண்மையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

65 மாணவத் தலைவிகள் பங்கேற்ற இந்தத் தலைமைத்துவ பயிற்சி முகாமில் துறைசார் வளவாளர்கள் கலந்து கொண்டு மாணவிகளுக்குப் பயிற்சிகளை வழங்கினர்.





# ஓய்வு நிலையில் பாராட்டு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அரச சேவையில் 32 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்ற நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலை ஆய்வு கூட உதவியாளர் ஐ.எல்.எம். தஸ்தகீர் பாடசாலை கல்வி சமூகத்தால் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பிரியாவிடை நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர் தலைமையில் பாடசாலை காசிமி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஐ.எல்.எம்.தஸ்தகீருக்கு பாடசாலை அதிபர் பொன்னாடை போர்த்தினார்.

வாழ்த்து மடல் வாசிக்கப்பட்டு நினைவுச் சின்னம் , பொற் கிளியும் பாடசாலையின் முதல்வர் மூலம் வழங்கப்பட்டன.





# அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் சுய தொழிலுக்கான உதவி வழங்கல்

(எம் எப். நவாஸ்)

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் சுய தொழில் மேற்கொள்வதற்காக மாற்றுப் பராமரிப்பு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சுய தொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இடியப்பம் அவிப்பதற்கும் அரிசி விற்பனைக்குமான பொருள்கள் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இன்று (25) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஷாபிர் கலந்து கொண்டு அப்பொருள்களை வழங்கி வைத்தார்.

இதன்போது விடய உத்தியோகத்தர்களான திருமதி ஹஸ்பியா வீவி, எஸ் ஏ எம் எஸ்.பர்ஹானா, எம். றனீஸ், எஸ். சியாத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது சுகாதார பிரிவில் டெங்கு நோய் பரவும் அபாயம்

## சுகாதார வைத்திய அதிகாரி அர்ஸத் காரியப்பர் எச்சரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொது மக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஸத் காரியப்பர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பொலிவேரியன் வீட்டுத் திட்ட கிராமம் மற்றும் கடற்கரையோரப் பிரதேசம் என்பவற்றில் அதிகளவிலான நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. அதனை கட்டுப்படுத்த பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.



இடைவிட்ட மழை மற்றும் வெப்பமான காலநிலை டெங்கு நுளம்பு பெருகுவதற்கு சாதகமான சூழலை தோற்றுவிக்கக் கூடும்.

எனவே பிரதேச மக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புற சூழல், நீர் தேங்கி நிற்கும் பொருள்கள், நீர் தேங்கும் இடங்கள், கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணி, படகு போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் தொழிற்படுமாறும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

சாய்ந்தமருது கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை வளாகத்திலும், சுற்று சூழலிலும் வாரத்துக்கு ஒருமுறை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதான பணிகளை முன்னெடுக்குமாறு பாடசாலை அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் உள்ள வடிகான்களில் நீண்ட காலத்துக்குக் கழிவு நீர் தேங்கியுள்ளதாகவும் இது குறித்து கல்முனை மாநகர சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.





# கிண்ணியா ஜீனியஸ் கால்பந்தாட்டம் ரேஞ்ஜேர்ஸ அணி சம்பியனானது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிண்ணியா கால்பந்தாட்ட சம்மேளனமும், கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த கால்பந்தாட்ட போட்டிகள் கிண்ணியா எளிலரங்கு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

கிண்ணியா ரேஞ்ஜேர்ஸ் கால்பந்தாட்ட அணிக்கும் கிண் ணியா புளூ பேர்ட் கால்பந்தாட்ட அணிக்கும் இடையிலான இறுதிப் போட்டியில் கிண்ணியா ரேஞ்ஜேர்ஸ் கால்பந்தாட்ட அணி சம்பியனானது.








# சாய்ந்தமருதில் பாரிய சுகாதார சீர்கேடு; சீர்செய்யுமா கல்முனை மாநகர சபை?

(எம்.வை.அமீர்)

கல்முனை மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் மாநகர சபையின் திண்மக் கழிவகற்றலில் சரியான முகாமைத்துவம் இல்லாமையாலும் மக்களுக்கு சரியான வழிகாட்டல் இன்மையாலும் மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளாலும் பாரிய சுகாதார அச்சுறுத்தல் ஏற் பட்டுள்ளது.

விஷேடமாகச் சாய்ந்தமருது 8 ஆம் பிரிவு தோணாவை அண்டிய வீதி, கடற்கரை வீதியின் மையவாடியை அண்டிய பிரதேசம், கடற்கரை வீதியின் லீடர் அஷ்ரப் வித்தியாலயத்தை அன்டிய பிரதேசம் என பட்டியல் நீண்டு செல்கின்றது.

சில காலங்களுக்கு முன்னர் குறித்த பிரதேசங்களில் திண்மக் கழிவகற்றல் நடைமுறை சரியாக பேணப்பட்ட போதிலும் இப்போது அந்த நடைமுறையைக் காணவில்லை என்று மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

வீடுகளில் சேரும் கழிவுகளை முகாமை செய்வதில், மக்களின் மனதில் உள்ள குறுகிய மனச் சிந்தனைகள் மாற்றமடைய வேண்டும் என்றும் மக்கள் பயணிக்கும் வீதிகள் மற்றும் குடியிருப்பு பிரதேசங்களில் கழிவுகளை வீசுவதை தவிர்க்க வேண்டும் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.

மக்களின் அடிப்படை சுகாதாரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழலில், சமூக ஆர்வலர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோர் அரசியல் தலைமைத்துவம் மற்றும் பள்ளிவாசல்களில் தலைமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு தலைமைத்துவங்களுக்கு முண்டியடிப் போர் இவ்வாறான சமூக சீர்கேடுகள் தொடர்பிலும் தங்களது கவனங்களைச் செலுத்த வேண்டும் என்றும் மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

அவசரமாகத் திண்மக்கழிவு அகற்றலை முன்னெடுக்க வேண்டியதுடன் ஆரம்பிக்கவுள்ள மழைகாலத்தில் மழைநீர் வடிந்தோடிச் செல்லக் கூடிய பிரதேசங்களில் உள்ள வடி கான்கள், விஷேடமாக தோணா போன்றவையும் சுத்தம் செய்யப்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

கல்முனை மாநகர ஆணையாளரே, பிரதேச செயலாளரே, சாய்ந்தமருது பிரதேச பொதுச் சுகாதாரத்துக்கு பொறுப்பான வைத்திய அதிகாரியே, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியே, அனர்த்த முகாமைத்துவத்துக்கு பொறுப்பான அதிகாரியே, பள்ளிவாசல் நிர்வாகங்களே, சமூக ஆர்வலர்களே சாய்ந்தமருது மக்களின் அவலம் போக்க முன்வருவீர்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டுள் ளது.

# மோட்டார் சைக்கிள் பின் ஆசனத்தில் அமர்வது பற்றி சட்டம் நடைமுறைக்கு!

## காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயலத் தெரிவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில் இருந்து பயணிப்பவர்கள் தொடர்பான சட்டம் விரைவில் நடை முறைக்கு கொண்டுவரப்பட இருக்கிறது.

இவ்வாறு காரைதீவு பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜெயலத் தெரிவித்தார்.

பொது மக்களுக்கு இந்த அறிவித் தலை விடுத்து அவர் மேலும் தெரி வித்ததாவது,

பின் ஆசனத்தில் இருப்பவர்கள் இரு பக்கமும் காலை வைத்து அமர்ந்து செல்ல வேண்டும். ஒரு பக்கம் காலை



வைத்து செல்கின்ற வேளையில் விபத் துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

அண்மையில் கூட மாவடிப்பள்ளியில் இடம்பெற்ற விபத்தில் 14 வயது சம் மாந்துறை மாணவி ஒருவர் பரிதாபமாக பலியாகி இருக்கிறார்.

மோட்டார் போக்குவரத்து சட்டத் தின்படி பின் ஆசனத்தில் அமர்பவர்கள் இரு பக்கமும் காலை வைத்து செல்ல வேண்டும் என்பது சட்டம்.

எனவே காரைதீவு பகுதியில் அநியாயமான உயிரிழப்புகளை தவிர்க்க வேண்டுமாக இருந்தால் இந்தச் சட்டம் மிக விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

அதற்கு முன்னதாக இந்த அறி வித்தலை பொதுமக்களுக்கு ஊடகங்கள் வாயிலாக விடுக்கின்றேன்.- என் றார்.

# மட்டக்களப்பு களுதாவளையில் குடும்பப் பெண் சடலமாக மீட்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களு தாவளை 4 ஆம் பிரிவு பாலர் பாடசாலை வீதியிலுள்ள வீடொன்றில் இருந்து குடும்பப் பெண் ஒருவர் சடலமாக நேற்று செவ்வாய்க்கிழமை (24) மாலை மீட்கப்பட்டுள்ளார் என்று களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் சசிகுமார் கௌரி (வயது - 44) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் கணவன் - மனைவி ஆகிய இருவரும் வசித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் கணவன் - மனைவி இருவருக்கும் இடையிடையே தகராறுகள் இடம்பெற்று வந்துள் ளது என்று அயலவர்கள் தெரிவித்த னர்.

குறித்த குடும்பப் பெண் தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

சம்பவதினமான நேற்று செவ் வாய்க்கிழமை தனது மகள் வேலைக்குச் சென்றுள்ளார் என நினைத்துக் கொண்டு அவரது தாயார் உயிரிழந்த மகளின் தொலைபேசிக்கு பல தட வைகள் அழைப்பெடுத்துள்ளார்.

இதேவேளை அவரது தொலைபேசி இயங்கவில்லை. உயிரிழந்த பெண் ணின் சகோதரன் தனது அக்காவின் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது அவரது வீடு பூட்டப்பட்டிருந்தது. ஆனாலும் அவரது செருப்பு வீட்டின் முன்பாகக் கிடந்துள்ளது.

சந்தேகம் கொண்ட சகோதரன் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்ததற்கு இணங்க வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்று





பார்த்தபோது படுக்கையில் இரத்தம் தோய்ந்த நிலையில் அவரது சகோதரி இறந்த நிலையில் கிடந்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த களு வாஞ்சிகுடி பொலிஸார், மட்டக்களப்பு குற்றத் தடுப்பு பிரிவினர், கைரேகை தடயவியல் பிரிவினர், உள்ளிட்ட பலரும் விசாரணைகளை மேற்கொண்டு ள்ளனர்.

பின்னர் சடலத்தைப் பார்வையிட்ட களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.றஞ்ஜித்குமார் சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு சென்று பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்த பெண் ணின் கணவர் தலைமறைவாகியுள்ளார். குறித்த பெண் அவரது கணவரால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர். அவரது கணவரையும் தேடி வருகின்றனர்.



## காந்தி : பொபி சான்ட்ஷ் : திலீபன்;

# சுதந்திர விடியலுக்கான அகிம்சை வேள்வி !



● நவீனன்

திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு இருந்த போது, அன்றைய இந்தியத் தூதுவர் தீக்சித்திடம் திலிபனின் உண்ணா விரதம் பற்றி பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியி ருந்தார்கள்.அதற்குப் பதிலளித்த தீக்சித், திலீபன் என்ன மகாத்மா காந்தியா? என்று இறுமாப்புடன் தெரிவித்திருந்தார்.

### காந்தியை விட திலீபன் மேலானவன்

இந்தியத் தூதுவர் தீக்சித்தின் இந்தக் கூற்று பற்றி பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த வை.கோபால்சாமி, திலீபன் மகாத்மா காந்தியைவிட சிறந்தவன் என்று அடித்துக் கூறியிருந்தார்.

வைகோ, தனது இந்த வாதத்துக்காக மகாத்மா காந்தியின் சுயசரிதையான சத்திய சோதனையில் இருந்து ஒரு சம்பவத்தையும் எடுத்துக் காண்பித்திருந்தார். மகாத்மா காந்தியின் இளமைப்பருவத்தின்போது அவரது தந்தை காலமாகிவிட்டார்.

தந்தையின் பூதவுடல் அஞ்சலிக்காக வீட்டின் கூடத்தில் கிடத்தி இருக்கையில், தனது இளமையின் பாலியல் உணர்ச்சிகளை காந்தியால் கட்டுப்படுத்த முடியாமல் மறைவில் சென்று அதனை தீர்த்துக் கொண்டார் என்று சத்திய சோதனையில் காந்தி தெரி வித்திருந்தார்.

இளவயதின் உணர்ச்சிகளை மகாத்மாவாலேயே அடக்கமுடியாது இருந்துள்ளது. ஒரு சோகமான நேரத் தில் கூட மகாத்மாவால் தனது பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்தமுடியாமல் அதற்கு வடிகால் தேடிச் சென்றுள்ளார்.

ஆனால் திலீபனோ தனது இள வயதில், அந்த வயதுக்கான அனைத்து உணர்ச்சிகளையும் உதறித் தள்ளிவிட்டு, தனது கொள்கைக்காக தன்னுயிரை தியாகம் செய்ய முன்வந்திருந்தான். இதனாலேயே மகாத்மா காந்தியை விட திலீபன் மேலானவன் என வை.கோபால்சாமி தெரிவித்திருந்தார்.

அகிம்சை ஒரு நெடிய போராட்டம். போராடிக் கொண்டே இருக்கலாம். முடிவு போராட்டத்தின் கையில் இல்லை. எதிராளியின் வலிமையை பொறுத்தே உள்ளது.

காந்தியால் இந்திய நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்க வில்லை என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி சொல்லி இருப்பதை பலரும் விமர்சித்துள்ளனர். ஆயினும் அகிம்சையின் உச்சம் தொட்ட திலீபனின் தியாகத்தை உலகம் என்றும் உணரும்.

மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் சொல்லியிருப்பது வன்மம் கலந்த நோக்கமே என்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், முதல்வர் இதனை கடுமையாக சாடியுள்ளார்.

கடந்த வருடம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ரவி பங்கேற்று பேசினார். அப்போது, மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் பேசிய கருத்துக்கள் விமர்சனத்துக்கு உள்ளாகின.

எனினும் காந்தியின் அகிம்சை அவர் பற்றியும், காந்தி பெற்றுத் தந்த இந்திய சுதந்திரம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. ஏன், மகாத்மா காந்தியை விட திலீபனின் தியாகத்தால் சிறந்தவன் என இந்திய அரசியல் தலைவர்களே கருத்துத் தெரி வித்துள்ளனர்.

ஆயினும் காந்தி தேசத்தின் தமிழின விரோத நிலைப்பாட்டின் அழியா சாட்சியாக விளங்குவதே தியாக தீபம் திலீபனின் உயிர்க் கொடையாகும். திலீபனின் போராட்டம் மற்றொரு முறை அகிம்சை என்ற உளுத்துப் போன தத்துவத்தின் உண்மை நிலையை பிரதிபலிப்பதாகவே உள்ளது.

தொடர்ச்சி▼

# சுதந்திர விடியலுக்கான அகிம்சை வேள்வி !

**தொடர்ச்சி ▲**

### ஐரிஷ் எழுச்சிக்கு அகிம்சை குரல்

சுதந்திர விடியலுக்கான அகிம்சை வேள்வியின் இன்னோர் அடையாளமே பொபி சான்ட்ஷ். ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக்கோரி இவர்கள் தமது உண்ணாநோன்பு இருந்தவர். இவர் உண்ணாநோன்பிருந்த காலத்தில் சிறையில் இருந்தவாறே ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1981 சிறைச்சாலையில் பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன்பிருந்த கைதிகளுக்குத் தலைமை வகித்தவர் பொபி சான்ட்ஸ் (Robert Gerard Sands, 'பொபி சான்ட்ஸ்' (Bobby Sands, மார்ச் 9, 1954 – மே 5, 1981). அந்த இளம் போராளி யாருமல்ல. அவரே பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடிய பொபி சான்ட்ஸ்.

வட அயர்லாந்தில் லிஸ்பேர்ன் நகரில் உள்ள சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்த அந்த இளம் போராளிக்கு அப்போது வயது 27.

அந்த இளம் போராளியுடன் சேர்ந்து பத்து பேர் இந்த உண்ணா நோன்பில் இணைந்து இறந்தனர். இவரின் இறப்பு ஐ.ஆர்.ஏ. அமைப்புக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின் பலர் இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர்.


பொபி சான்ட்சுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் ஆதரவாக பலத்த குரலெழுப்பப்பட்டன. இப் போராட்டம் 66 நாள்களில் முடிவுக்கு வந்தது. 1981 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி சுயநினைவற்ற நிலையிலேயே அப்போராளியின் உயிர் பிரிந்தது.

### உண்ணாவிரத போரில் பொபி சான்ட்ஸ்

பிரிட்டன் வட அயர்லாந்து என்ற பகுதியை காலணிப்படுத்தி வைத்திருப்பதையும், ஐஆர். ஏயின் போராட்டம் பிரிட்டிஷ் அரசுக்கு சவாலாக வளர்ந்து விட்டதையும் வட அயர்லாந்து பிரச்சினையில், அப்போதய பிரதமர் மார்க்கரெட் தாட்சர் ஆக்கிரமிப்பாளர்களான ஆங்கிலேய குடியேறிகளை ஆதரித்தார். விடுதலைக்காக போராடிய ஐரிஷ் மக்களை அடக்குவதில் குறியாக இருந்தார்.

விடுதலைக்காக போராடும் ஐரிஷ் சிறுபான்மை இனத்தை ஒடுக்கும், பிரிட்டிஷ் கொடுங்கோன்மையை உலகம் அறியச் செய்த போராட்டம் அது. இந்த உண்ணாவிரத போராட்டம் நாளுக்கு நாள் நாடு தழுவிய எழுச்சியை ஏற்படுத்தியது. உலக நாடுகள் மத்தியில் பேச்சு பொருளானது, இந்த நேரத்தில் 1981 இல் ஐக்கிய இராச்சியத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் உண்ணாவிரதம் இருந்த நிலையிலேயே ஐரீஸ் குடியரசு இயக்கம் (Irish Republican Movement ) சார்பில் நின்று தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

உண்ணா விரதமிருந்து மரணத்தை தழுவிக் கொண்ட பொபி சாண்ட்சின் மரண ஊர்வலத்தில், பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்த செய்தி சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்து, உலகம் முழுவதும் பேசப்பட்டது. அது தாட்சர் அரசுக்கு, சர்வதேச மட்டத்தில் தலை குனிவை ஏற்படுத்தியது.




அதேபோன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பொபிசான்ட்ஸின் போராட்டம், தேசிய இனங்களை அடிமைப்படுத்தி அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்த ஏகாதிபத்தியங்கள் அம்மக்களின் அகிம்சா வழி போராட்டங்களை எப்போதுமே கண்டு கொள்ளாது என்பது தான் உலக விதியும் வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டது.

### ஒப்பிலா அறவழி போராளி திலீபன்

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன் என தன்னுடலுக்கு துரோகமும் தன்னினத்ததுக்குத் தன்னையும் தந்த ஒப்பிலா அறவழிப் போராளி திலீபனின் இறுதி வார்த்தைகளே இவையாகும்.

தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்த ஒரு சமதர்ம சோசலிச தமிழீழமாகத் தான் மலரும் என்ற விடுதலைக் கனலை விழியிலேந்திய பார்த்திபன் இராசையா என்னும் இயற்பெயர் கொண்டவர் திலீபன்.

காந்தியின் அகிம்சை வழியில் தன் விடுதலையை பெற்றெடுத்ததாக கூறும் இந்தியா, உலகெங்கிலும் அகிம்சை குறித்து அறிவுரை கூறிக் கொண்டிருக்கும் இந்தியா, அகிம்சை போராட்டத்தை கையிலெடுத்த திலீபனுக்கு அளித்த பரிசு இதுதான்.

உண்மையில் அகிம்சை மூலமாக இந்தியா விடுதலைப் பெற்றது என்பதே இந்திய விடுதலையை ஒட்டி எழுப்பபட்ட மிகைப்படுத்தப்பட்ட பிம்பம்தானே தவிர அகிம்சை மட்டுமே இந்தியாவின் விடுதலைக்கு காரணமாக அமைந்து விடவில்லை. இந்திய விடுதலை அகிம்சையால் நிகழ்ந்தது என்றால் அதனைவிட ஆயுதமேந்தி போராடிய இந்திய வீரர்களை மறந்துவிட முடியாது.

தமிழ் நாடு ஆளுநரின் கருத்துக்குக் கண்டனங்கள் எழுந்தாலும், காந்தியின் அகிம்சையும் திலீபனின் உயிர்க்கொடையையும் ஒரே தட்டில் ஒப்பிட முடியாது. திலீபனுக்கும், காந்திக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. திலீபன் காந்தீய வழியில் தன் போராட்டத்தை முயன்றார். ஆனால் காந்தி போல் உயிர் வாழ முயலவில்லை. திலீபன் தன் உயிரை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. தியாகத்தின் உச்சத்துக்கே திலீபன் சென்றார்.

# இந்தியாவின் எந்தவொரு பகுதியையும் பாகிஸ்தான் என்று அழைக்க முடியாது!

உயர் நீதிமன்ற விசாரணையின் போது முஸ்லிம்கள் அதிகம் வாழும் பெங்களூரின் ஒரு பகுதி குறித்து சர்ச்சைக்கு உரிய கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இதற்குக் கர்நாடகா உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஷானந்தாவுக்கு உச்ச நீதிமன்றம் புதன்கிழமை கடும் கண்டனம் தெரிவித்தது. மேலும், இந்தியாவின் எந்த பகுதியையும் பாகிஸ்தான் என்று அழைக்க முடியாது என்றும் தெரிவித்தது.





நிலத்தின் உரிமையாளர் – குத்தகைதாரர் தொடர்பான வழக்கு விசாரணையின் போது கர்நாடகா உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஷானந்தா பெங்களூருவில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதியை பாகிஸ்தான் என்று அழைத்திருந்தார்.

மேலும் பெண் வழக்கறிஞர் ஒருவருக்கு எதிராக பெண் வெறுப்பு கருத்து ஒன்றைத் தெரிவித்திருந்தார் .இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின.

இதனைத் தொடர்ந்து செப்ரெம்பர் 20 அன்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான 5 பேர் கொண்ட அமர்வு இந்த விவகாரத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது.

இது தொடர்பாக கர்நாடகா உயர் நீதிமன்ற பதிவாளரிடம் அறிக்கை கேட்டிருந்தது. இந்த நிலையில் புதன்கிழமை வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற அமர்வு உயர் நீதிமன்ற நீதிபதியின் மன்னிப்பை ஏற்றுக்கொண்டு வழக்கை முடித்துவைத்தது.

இது தொடர்பாக நீதிமன்ற அமர்வு, "உயர் நீதிமன்ற நீதிபதி எங்கள் முன்பு வாதியாக இல்லாததால், நாங்கள் மேலும் வழக்கை நடத்த விரும்பவில்லை. வழக்கு விசாரணையை நாங்கள் முடிக்க விரும்புகிறோம். இந்த மின்னணு யுகத்தில் அனைத்து நிறுவனங்கள் மீது இருக்கும் எதிர்பார்ப்புகள் அவைகளின் பண்புகளை மேம்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம். நீதிபதிகளும் தங்களின் பண்புகளை மேம்படுத்திக் கொள்ளவேண்டும்.

யாரும் இந்தியாவின் எந்தவொரு பகுதியையும் பாகிஸ்தான் என அழைக்க முடியாது. அடிப்படையில் இது நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரானது. இது போன்ற சர்ச்சைகள் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணைகளின் நேரடி ஒளிபரப்பை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தூண்டிவிடக் கூடாது. எந்த இடத்தில் இருந்தும் நீதியை மக்கள் அணுகுவதற்கு இந்த வசதிகள் ஒரு வடிகாலாக மாறியுள்ளன.

நீதிபதிகள், வழக்கறிஞர்கள், அலுவலக பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் நீதிமன்ற வழக்கு விசாரணைகள் அதில் நேரடியாக பங்கு பெறாத நீதிமன்றத்துக்கு வெளியே இருக்கும் மக்களைச் சென்றடைகிறது என்பதை அறிந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவர்களின் வாழ்க்கையின் முன்னனுபவங்களின் அடிப்படையில் ஒரு முன்தீர்மானம் இருக்கும் என்பதை நீதிபதிகள் அறிந்திருக்க வேண்டும். நீதிபதிகள் தங்களின் முன்தீர்மானங்கள் பற்றி அறிந்துவைத்திருக்க வேண்டும். ஒரு நீதிபதியின் மனமும் ஆன்மாவும் பாரபட்சமின்றி இருக்க வேண்டும் அப்போதுதான் நம்மால் சரியான நீதியை வழங்க முடியும்.

கர்நாடகா உயர் நீதிமன்ற நீதிபதி மன்னிப்புக் கோரியுள்ளார். நீதிமன்ற விசாரணையில் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி வெளிப்படையாக மன்னிப்பு கோரியிருப்பதை மனதில் கொண்டு நீதியின் நலன் மற்றும் நீதிமன்றத்தின் கண்ணியத்தை கருத்தில் கொண்டு நாங்கள் வழக்கை மேலும் தொடர விரும்பவில்லை." என்று தெரிவித்துள்ளது.

# இந்திய மீனவர் பிரச்சினை; புதிய அரசில் தீர்வு கிட்டப்படும்!

இலங்கையின் கடற்பரப்புக்குள் இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ள நிலையில் புதிய அரசில் இதற்கான தீர்வு கிட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அனுர பதவியேற்றதிலிருந்து அதிரடி மாற்றங்கள் இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது கடற்றொழில் விடயத்திலும் மாற்றம் வருமென இலங்கை கடற்றொழிலாளர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் கடற்றொழில் விடயத்தில் இலங்கையுடன் முரண்பாட்டில் இருக்கும் இந்தியா புதிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

அந்தவகையில், தமிழகக் கடற்றொழிலாளர்களின் உரிமையை நிலைநாட்ட இலங்கையின் புதிய அரசுக்கு மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அனுரகுமார திஸாநாயக்கவிடம் இந்தியாவின் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதா வேண்டுக்கோள் விடுத்துக கடிதம் அனுப்பியுள்ளார்.

தனது இறையாண்மையுள்ள ஜனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்திப் புதிய தொடக்கத்தை ஏற்படுத்தி இலங்கைச் சிறையில் வாடும் அனைத்து இந்திய மீனவர்களையும் நல்லெண்ணம் மற்றும் அன்பின் அடையாளமாக விடுவிக்க உத்தரவிட வேண்டும் என ஆர்.சுதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கு ஒரு புதிய திசையை வழங்குவதற்கான தனது உறுதியான நோக்கத்துக்கு இத்தகைய சைகை நிறைய வலு சேர்க்கும் என்றார்.

மயிலாடுதுறை தொகுதியைச் சேர்ந்த 37 கடற்தொழிலாளர்களை விடுவிப்பதன் மூலம் ஒரு நல்ல தொடக்கத்தை உருவாக்க முடியும். மேலும் 80 கடற்தொழிலாளர்கள் மற்றும் 173 மீன்பிடி படகுகள் இலங்கையின் தடுப்பில் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




# மத்திய கிழக்கில் போர் பதற்றம்; விமான சேவைகள் இரத்தாகின!

இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையே மோதல்கள் அதிகரித்து கடும் பதற்றமான சூழ் நிலை ஏற்பட்டுள்ளதால் இஸ்ரேல் மற்றும் லெபனானுக்கான விமான சேவைகளை சில நாடுகள் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்து செய்துள்ளன.

கிழக்கு – மேற்கு நாடுகளின் பயண முனையமாக இருக்கும் ஐக்கிய அரபு அமீரகம் லெபனான் நாட்டுக்குச் செல்லும் விமானங்களை ரத்து செய்துள்ளது.

அமீரகத்தின் நீண்ட பயண நேரம் கொண்ட எதிஹாத், பிளைதுபை ஆகிய விமான நிறுவனங்களின் விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று எகிப்து நாட்டின் ஃபிளாக்ஷிப் நிறுவன விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. எகிப்து தலைநகர் கைரோவிலிருந்து லெபனான் தலைநகர் பெய்ரூட்டுக்கு நாள்தோறும் இரு விமானங்கள் இயக்கப்பட்டு வந்தன. அவை இனி தற்காலிகமாக இயங்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மறு உத்தரவு வரும் வரை விமான போக்குவரத்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

போர் பதற்றத்தின் காரணமாக இஸ்ரேலுக்குச் செல்லும் சில விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் ஏர்வேஸ், ஸ்பெயின் நாட்டின் இபிரியா, அஜர்பைஜான் உள்ளிட்ட ஏர்லைன்ஸ்களும் இஸ்ரேலுக்குச் செல்லும் விமானங்களை ரத்து செய்துள்ளன.

# லெபனானில் மக்களின் வீடுகளில் ஆயுதம் பதுக்கியுள்ள ஹிஸ்புல்லா!

## இஸ்ரேல் வெளியிட்டு அதிர்ச்சிப் புகைப் படங்கள்

லெபனானில் மக்களின் வீடுகளில் ஹிஸ்புல்லாக்களின் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் புகைப் படங்களை இஸ்ரேல் வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மிகப்பெரிய குடியிருப்புப் பகுதிகளில், ஒவ்வொரு வீட்டின் படுக்கையறை உள்ளிட்டஅறைகளில், ஆயுதங்கள் இருப்பதற்கான புகைப் படத்தையும், வீடுகளுக்குள் ஆயுதங்கள் இருக்கும் புகைப் படங்களையும் வெளியாக்கி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலின்போது தெற்கு லெபனானில் உள்ள வீடுகள் மற்றும் கட்டடங்களில் ஹிஸ்புல்லாக்கள் ஆயுதங்களைப் பதுக்கி வைத்துள்ளதாகக் கருதிய இஸ்ரேல், அந்த வீடுகள் மற்றும் கட்டடங்களில் இருந்து வெளியேறுமாறு அரபு மொழியில் குறுஞ்செய்தி அனுப்பி எச்சரிக்கை விடுத்ததாக லெபனான் ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஹிஸ்புல்லாக்கள் ஆயுதங்களைப் பதுக்கிவைத்துள்ள இடங்கள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கில், லெபனானில். சுமார் 300 இலக்குகளைக் குறிவைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது.

எனினும் இந்தத் தாக்குதலின்போது இஸ்ரேல் வீசிய சில குண்டுகள் பொதுமக்கள் குடியிருக்கும் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இந்த நிலையில்தான், மக்களின் வீடுகளுக்குள் மிகப்பெரிய ஏவுகணை உள்ளிட்ட ஆயுதங்கள் பதுக்கி



வைக்கப்பட்டிருப்பதற்கான புகைப்படத்தை இஸ்ரேல் வெளியிட்டு அச்சத்தை அதிகரித்துள்ளது.

லெபனானில் இஸ்ரேல் இதுவரை நடத்திய தாக்குதல்களிலேயே நேற்று முன்தினம் நடத்தியதுதான் கடுமையான தாக்குதலாகும்.

ஏராளமான பெண்கள், குழந்தைகள் இந்த தாக்குதலில் பலியானமைக்கு உலக நாடுகள் கவலை தெரிவித்திருக்கும் நிலையில், குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தியது ஏன் என்பதை விளக்கும் வகையில், இஸ்ரேல் இந்த புகைப் படங்களை வெளியிட்டுள்ளது.

கனடா முரசு
பக்கங்கள் 05
புதன்கிழமை 25/09/2024

## மகனால் படுகொலை செய்யப்பட்ட தாய்!

மகன், தனது தாயை படுகொலை செய்த சம்பவமொன்று கனடாவில் பதிவாகியுள்ளது.

ரிச்மன்ட்ஹில் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பெண் ஒருவரின் சடலம் 02



# கனடியர்கள் இப்போது ஒரு தேர்தலை விரும்புகின்றனர் எனக் காட்ட முயற்சி

### எதிர்க்கட்சி எத்தனம் குறித்து பிரதமர் ட்ரூடோ விசனம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 25

கனடியர்கள் இப்போது ஒரு தேர்தலை விரும்புகின்றனர் என்ற எண்ணத்தை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயல்கின்றன எனப்பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க நகரில் உள்ள ஜஸ்டின் ட்ரூடோ, 'த லேட் ஷோ' தொலைக் காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். C2




# நம்பிக்கையில்லாப் பிரேரணை ட்ரூடோவின் அரசுக்கு எதிராக!

### நேற்று சமர்ப்பிப்பு; இன்று வாக்கெடுப்பு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 25

லிபரல் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று சபையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

அரசாங்கம் மற்றும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையாக இது அமைவதாக கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியேவ் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு C2

# முதலீட்டு மோசடிகள் குறித்து கனடாவில் முன்னெச்சரிக்கை




கனடாவின் பிரம்டன் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் 1,70,000 டொலர்களை மோசடி செய்துள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் முதலீட்டு நிறுவனம் ஒன்றின் பெயரைப் பயன்படுத்தி இந்த மோசடி இடம்பெற்றுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிறுவனத்திடம் போலியான தகவல்களை வழங்கி இணைய வழியில் இந்த நபர் மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனக் கூறப்பட்டது.

இந்த சம்பவத்தில் நபர் ஒருவர் பாதிக்கப்பட்டு பெருந்தொகை பணத்தை இழந்துள்ளார்.

மெய்யாகவே ஒரு நிறுவனத்திடம் முதலீடு செய்வார் எனக் கருதி ஒரு நபரிடம் ஒரு லட்சத்து 70 ஆயிரம் டொலர்களை இந்த நபர் ஏமாந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பணத்தை முதலீடு செய்த நபர் நிறுவனத்திடம் தொடர்பு கொண்டு வினவியபோது அவ்வாறு எவ்வித முதலீடுகளும் செய்யப்படவில்லை என்பதை அறிந்துகொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து தம்மை ஏமாற்றிய நபருக்கு எதிராக அந்நபர் முறைப்பாடு செய்துள்ளார்.

62 வயதான ஜான் மார்ஷல் என்ற நபரே இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இணைய வழியில் முதலீடு செய்பவர்கள் மிகுந்த அவதாரத்துடன் செயல்பட வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

முதலீடு செய்வதற்கு முன்னதாக கனடிய மோசடி தவிர்ப்பு நிலையம் அல்லது ஒன்றாரியோ பாதுகாப்பு ஆணைக்குழு என்பனவற்றிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வது பொருத்தமானது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடியில் வேறு எவரேனும் சிக்கியிருந்தால் அது தொடர்பில் அறிவிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## மகனால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டுள்ளது.

நோர்த் யோர்க் பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தில் 60 வயதான ஸியோமி வெங் என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

ஸியோமியின் மகனான 23 வயதான ஹென்றி ஹேய் என்பவர் இந்தப் படுகொலையை செய்துள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் கிடையாது என தெரிவிக்கப்படுகின்றது.

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஏனைய எதிர்க்கட்சிகள் வாக்களிக்க மாட்டா.

புதிய ஜனநாயகக் கட்சி மற்றும் புளொக் கியூபெக்குவா ஆகிய கட்சிகள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்க முடிவு செய்துள்ளன.

## கனடியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடியர்கள் தங்களின் வாழ்க்கைச் செலவு விரக்தியை தன் மீது சுமத்துகின்றனர் எனக் கூறிய பிரதமர், அதன் காரணத்தை புரிந்துகொள்கின்றார் எனவும் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணை, லிபரல் கட்சி யின் குறைந்து வரும் மக்கள் ஆதரவு குறித்து கேள்வி எழுந்தபோது இந்த கருத்துக்களை தெரிவித்தார்.



# லெபனானில் உள்ள கனடியர்களை உடன் வெளியேறுமாறு கோரிக்கை

## கனடா அரசு வேண்டுகோள்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 25

லெபனானில் உள்ள கனடியர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற அறிவுறுத்தப்படுகின்றனர்.

விமான சேவைகள் நடைமுறையில் உள்ள போது லெபனானில் உள்ள கனடியர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என கோரப்படுகிறது.

அரசாங்கத்தின் உதவியுடன் கனடியர்கள் வெளியேற்றப்படும் நிலைமை வரைக் காத்திருக்க வேண்டாம் எனவும் கோரப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் - லெபனான் போராளிக் குழுவான ஹிஸ்புல்லாவுக்கும் இடையே அதிகரித்து வரும் வன்முறைகளுக்கு மத்தியில் இந்த கோரிக்கையை கனடிய அரசாங்கம் முன்வைத்துள்ளது

லெபனானில் உள்ள கனடியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு உதவிகள் எதுவும் தற்போது வழங்கப்படவில்லை என கனடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு வெளிநாட்டிலிருந்து அரசாங்கத்தின் உதவியுடன் கனடியர்கள் வெளியேற்றப்படுவது கடைசி தேர்வாகும் எனவும் வெளிவிவகார அமைச்சு கூறியது.

லெபனானில் 45,000 கனடியர்கள் உள்ளனர் எனக் கனடிய வெளியுறவு அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார்.




# தவறான முறைகளில் கொடுப்பனவுகளைப் பெற்ற 300 வருமான வரி நிறுவன ஊழியர்கள் பணிநீக்கம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 25

தவறான முறையில் கனடிய அவசரகால பதிலளிப்பு பயன்கள் கொடுப்பனவுகளை பெற்றதனால் பணிநீக்கம் செய்யப்பட்ட கனடிய வருமான வரி நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

கனடிய வருமான வரி நிறுவன ஊழியர்கள் 300 பேர் வரை தவறான முறையில் கனடிய அவசரகால பதிலளிப்பு பயன் கொடுப்பனவுகளை பெற்றமையால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கனடிய வருமான வரி நிறுவனம் இந்த புதிய தரவை வெளியிட்டது.

கொவிட் தொற்று காலத்தில் அவசர கால உதவி தொகையை பெற்றவர்கள் எனக் கண்டறியப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை குறித்த புதிய தரவை வருமான வரி நிறுவனம் வெளியிட்டது.

ஜூலை17 ஆம் திகதி வரை, தகுதியில்லாத 289 பணியாளர்கள் கனடிய அவசரகால பதிலளிப்பு பயன் கொடுப்பனவுகளை பெற்றுள்ளனர் என கனடிய வருமான வரி தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை மார்ச் மாதத்தில் அறிவிக்கப்பட்ட 232 ஊழியர்களை விட அதிகமாகும்.

இவர்கள் தொடர்ந்தும் கனடிய வருமான வரி நிறுவனத்தால் பணியமர்த்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



# நாடாளுமன்ற அமர்வுகளில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து சபாநாயகர் எச்சரிக்கை

ஒன்றாரியோ, செப்ரம்பர் 25

சபை அமர்வுகளில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சபாநாயகர் கிரெக் பெர்குஸ் கடுமையான எச்சரிக்கை விடுத்தார்.

லிபரல் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த விவாதத்திற்கு முன்னதாக இந்த எச்சரிக்கை வெளியானது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிக்க மாட்டோம் எனக் கடந்த வாரம் புதிய ஜனநாயகக் கட்சி எடுத்துள்ள முடிவு சபையில் பெரும் விவாதத்திற்கு வழிவகுத்தது.

அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு ஆதரவாக வாக்களிக்க மறுத்தமைக்காக புதிய ஜனநாயகக் கட்சி தலைவர் ஜக்மீத் சிங்கினை கன்சர்வேட்டிவ் கட்சி தலைவர் பியர் பொய்லியேவ் கடுமையாக விமர்சித்தார்.

இந்த நிலையில் வன்முறை, அவமதிப்பு, அச்சுறுத்தல்களுக்கு சபையில் இடம் இல்லை என்பதை மீண்டும் உறுதிப்படுத்தும் பிரேரணை ஒன்று கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

புளொக் கியூபெக்குவார நாடாளுமன்ற உறுப்பினர் கிளோட் டிபெல்பியுலே இந்தப் பிரேரணையை முன்வைத்தார்.

சபையில் இருந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதற்கிடையில், சபையின் நன்மதிப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உறுப்பினர்கள் சிலர் சபாநாயகருக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த விடயத்தில் சபாநாயகருக்கு பல அதிகாரங்கள் உள்ளன என சுட்டிக்காட்டிய பசுமை கட்சி தலைவர் எலிசபெத் மே, அவை பயன்படுத்தப்படுவதில்லை என அதிருப்தி தெரிவித்தார்.



# ஹெய்ட்டி நெருக்கடி நிலை குறித்து பிரதமர் ட்ரூடோ கவலை தெரிவிப்பு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 25

ஹெய்ட்டியில் நிலவும் நெருக்கடி நிலை குறித்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கவலை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் சில உலகத் தலைவர்களுடன் ஹெய்ட்டி குறித்து உரையாடினார்.

ஹெய்ட்டிக்கான ஐ.நா ஆலோசனைக் குழுவிற்கான உயர்மட்ட கூட்டத்தில் பிரதமர் கடந்த திங்கட்கிழமை உரையாற்றினார்.

முனதாக ஹெய்ட்டியின் தற்காலிக பிரதமர் கெர்ரி கொனில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவைச் சந்தித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ஞாயிற்றுக்கிழமை நியூயோர்க் சென்றடைந்தார்.

ஞாயிறு நடைபெற்ற ஐ.நா.வின் எதிர்கால உச்சி மாநாட்டில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உரையாற்றினார்.




# கிட்சனர் விபத்தில் மூவர் உயிரிழப்பு!

கனடாவின் வாட்டர் லூ பிராந்தியத்தில் திங்கள் அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்து சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

டெஸ்லா ரக வாகனம் ஒன்றும் டொட்ஜ் ரக வாகனம் ஒன்றும் இவ்வாறு மோதிக்கொண்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோ கிட்சனர் பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் டெஸ்லா ராக வாகனத்தை செலுத்திய 25 வயதான சாரதியும், காரில் பயணித்த மேலும் இருவரும் உயிரிழந்துள்ளனர்

# வேலை வாய்ப்புத் தருவார் எனக் கூறி தவறாக நடந்த 70 வயது நபர் கைது

கனடாவின் ரொறன்ரோவில் தொழில் வாய்ப்புக்காக விண்ணப்பம் செய்த இரண்டு பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொண்ட ஒருவர் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் புட் பிரிட்ஜ் பகுதியைச் சேர்ந்த இந்த நபர் தொழில் வாய்ப்பு வழங்குவார் எனக் கூறி இரண்டு பெண்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார்.

தொழில் வாய்ப்பு வழங்குவதாக செய்யப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் பெண்கள் அந்த இடத்திற்குச் சென்றுள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பம் செய்த பெண்ககளை அழைத்து வெவ்வேறு நேரத்திற்கு வருமாறு அந்த நபர் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சென்ற பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளன.

70 வயதான ஜேக்கப் நிமோ என்ற நபரே இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நபரை கடந்த 21 ஆம் திகதி பொலிஸார் கைது செய்துள்ளனர்.



சந்தேக நபருக்கு எதிராக பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டு உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சந்தேக நபரின் படத்தையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான வேறும் சம்பவங்கள் இடம் பெற்று அதில் வேறு யாரேனும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் முறைப்பாடு செய்ய முடியும் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.